பக்கங்கள் 18 + 06

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 06 வியாழக்கிழமை 20.06.2024 அதிர்வு 325



# பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அரோகரா கோஷம் இன்று தேரேறி வந்தாள் நயினை நாகபூசணி அம்மன்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் இரதோற்சவப் பெருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் பக்திபூர்வமாக இன்று இடம்பெற்றது. (படம்:- எஸ்.நிதர்ஷன்)



# ரணிலுடன் ஜெய்சங்கர் பேச்சு

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பில் சம்பந்தன் எம்.பி. பங்கேற்கமாட்டார்; திடீர் சுகவீனமே காரணம்

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வந்த இந்திய வெளி விவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங் கர், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை நேரில் சந்திப்பு பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகை யில் இடம்பெற்றது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

04

# யாழ்ப்பாணத்தில் மர்மமாக மாயமாகும் வயோதிபர்கள்!

## பின்னணி என்ன என்று சபையில் சிறீதரன் கேள்வி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வயோதிபர்கள் மிகவும் மர்மமான முறையில் காணாமல்போகும் சம்பவங்களின் பின்னணி தொடர்பில் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

"யாழ். மாவட்டத்தில் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த வயோதிபர்களும், பிரபல வர்த்தகர்களும் காரணங்களற்று திடீரெனக் காணாமல்போகும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. கடந்த ஏழு வருடங்களாக நடைபெறும் சில விடயங்களை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இத்தகைய சம்பவங்கள் வயது மூப்பினால் தன்னிச்சையாக இடம்பெறுபவை என அடையாளப்படுத்தப்படாத நிலையில், அவற்றின் பின்னணி குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பிரபல வர்த்தகரான வேலுபிள்ளை நடராசா (வயது – 63) கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில், மாதாந்த மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளார்.

இவரின் மகனான நடராஜா குகராஜ் ஊடகவியலாளராகக் கடமையாற்றுகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு, பத்திரிகை விளம்பரம், சமூக வலைத்தளங்கள் மூலமான பதிவுகள் என ஏழு வருடங்களாகத் தேடுதல் நடந்தும் எந்த முடிவும் கிட்டவில்லை.

அதேபோல் யாழ். புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி யோகம்பா சோபிநாதன் (வயது – 63) என்பவர் ஆறு மாதங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் காணாமல்போயுள்ளார். இவர் எங்கே என்பது இதுவரை தெரியாது.

யாழ். புங்குடுதீவு, மடத்துவெளியைச் சேர்ந்த பிரபல



கோடீஸ்வர வர்த்தகரும், வர்த்தகத்துறை சார்ந்து இலங்கை அரசால் தேசமானிய விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டவரும், புங்குடுதீவு மக்களால் அதிகம் அறியப்பட்டவருமான வைத்திலிங்கம் கணகலிங்கம் (வயது – 82) 2024 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி மதியவேளை, அவரின் வீட்டின் முன்பாக இருந்தவேளை திடீரெனக் காணாமல்போயுள்ளார்.

பிறிதொருவரின் உதவியற்று நடந்து செல்லவோ அல்லது வாகனங்களில் ஏறிச் செல்லவோ முடியாத நிலையில் இருந்த அவர், திடீரென வீட்டு வாசலில் இருந்தே காணாமல்போயுள்ளமை மர்மம் நிறைந்ததாகவே உள்ளது. இதுவரை அவர் பற்றி எவ்வித தகவல்களும் இல்லை.

இவ்வாறு வயோதிபர்கள் காணாமல்போதல், இளைஞர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுதல், கைதுகள், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் என்பன இங்கு நடக்கின்றன. இந்த நாட்டின் நீதி, சிவில் நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி சிந்தியுங்கள்.

யாழ். மண்ணில் இந்த மூன்று வயோதிபர்களுக்கு மேலதிகமாக இன்னும் பலர் காணாமல்போயிருக்கக் கூடும். இவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை." – என்றார்.

# குளவி கொட்டி தோட்டத் தொழிலாளர்கள் பாதிப்பு

(எஸ்.சதீஸ்)

குளவிக்கொட்டுக்கு இலக்கான 8 பெண் தோட்டத் தொழிலாளர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பொகவந்தலாவை, கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்ட இரண்டாம் இலக்கத் தேயிலை மலையில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தொழிலாளர்களே குளவிக்கொட்டுக்கு இலக்காகினர்.

பாதிக்கப்பட்டவர்கள் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

மரம் ஒன்றில் இருந்த குளவிக் கூட்டில் பருந்து மோதியதையடுத்து, குளவிகள் கலைந்து தொழிலாளர்களைத் தாக்கின.

குளவிக்கொட்டுக்கு இலக்கான 8 பெண் தொழிலாளர்களுள் 6 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர் என்றும், இருவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.எகே.ஜெயசூரிய தெரிவித்தார்.







# நெடுந்தீவில் குழு மோதல்! இளைஞர் ஒருவர் கொலை!!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவு பொலிஸ் பிரிவில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சமக்கீன் தேவராஜ் அருள்ராஜ் என்ற 23 வயதான இளைஞரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு தரப்பினருக்கிடையில் நிலவிய முற்பகை காரணமாக நேற்று இரவு மது போதையில் வாய்த்தர்க்கம் இடம்பெற்றது என்றும், அதன் பின்னர் கொலை இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொலை செய்யப்பட்டவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாக இன்று அதி காலை மீட்கப்பட்டார். அதன்பின்னர் சடலம் நெடுந்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.



கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுந்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.






# அக்கரப்பத்தனைப் பகுதியில் தீ விபத்தால் 5 பேர் நிர்க்கதி!

(ஆ.ரமேஸ்)

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கிலாஸ்கோ தோட்டப் பிரிவான நெதஸ்டல் தோட்டத்தில் இன்று அதி காலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் வீடொன்று சேதமடைந்துள்ளது.

20 அறைகளைக் கொண்ட குடியி ருப்பு தொகுதியில் வீடொன்று எரிந்து நாசமாகியுள்ளதால், குறித்த வீட்டில் வசித்து வந்த குழந்தை பிரசவித்து சில நாட்களான தாய் உட்பட ஐவர் நிர்க் கதியாகியுள்ளனர்.

அயலவர்கள், தோட்டப் பொதுமக்கள் இணைந்து ஏனைய வீடுகளுக்குத் தீ பரவாமல் தீயைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வந்துள்ளனர். இத னால் பாரிய அனர்த்தம் தடுக்கப்பட் டுள்ளது.

மேலும், இந்தத் தீ விபத்து சம்ப வத் தில் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக் குள்ளா கியுள்ள ஐவர் கொண்ட குடும்பத்தினரைத் தோட்டத்தில் தற் காலிகமாக உறவினர் வீடு ஒன்றில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

அத்துடன் இந்தத் தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் இது தொடர்பான விசாரணைகளை அக் கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# யாழில் மரத்தில் இருந்து தவறி வீழ்ந்த கூலித் தொழிலாளி பரிதாப உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மரத்தில் இருந்து தவறி கீழே வீழ்ந்த கூலித் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மார்க்கண்டு சதீஸ்வரன் (வயது 44) என்பவரே இதன்போது உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் மாங்காய் பிடுங்கும் தொழிலுக்குக் காரைநகருக்குச் சென்ற வேளை நேற்றுக் காலை மரத்தில் இருந்து தவறி கீழே வீழ்ந்தார்.

இதன்போது இவர் கூடத் தொழிலுக்குச் சென்றவர்கள் உடன் அருகில் இருந்த ஓட்டோக்களின் உதவியைக் கோரிய போதும் ஓட்டோக்களின் உரிமையாளர்கள் அச்சத்தின் காரணமாக மறுப்புத் தெரிவித்தனர்.

இதன்காரணமாக அவசர நோயாளர் சேவையின் உதவி நாடப்பட்டது. அவசர நோயாளர் சேவை வாகனம் அந்த இடத்துக்கு வருகை தந்து தொழிலாளியைப் பரிசோதித்த சமயம் அவரின் உயிர் பிரிந்துள்ளமை உறுதி செய்யப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி












### ரணிலுடன்...

மேற்படி சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இந்தியாவில் புதிய ஆட்சி அமைத்திருக்கும் நிலையில் அந்நாட்டு பிரதிநிதியொருவர் வெளிநாட்டுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயத்தை அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு மேற்கொண்டுள்ளர்.

ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் வரவேற்பளிக்கப்பட்டது.

அதனையடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஆரம்பமானதோடு, இரு நாடுகளுக்கிடையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் இருதரப்பு பேச்சு ஆரம்பமாகியது.

இதன்போது, இந்திய – இலங்கை உறவின் மைல்கல்லை அடையாளப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட 3 அபிவிருத்தித் திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரினால் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கண்டி, நுவரெலியா, மாத்தளை பிரதேசங்களில் அமைக்கப்பட்ட 106 வீடுகளின் டிஜிட்டல் பெயர் பலகையும் ஜனாதிபதியும், இந்திய வெளிவிவகார அமைச்சரும் திறந்து வைத்தனர்.

கொழும்பு 1 திருகோணமலையின் இரண்டு மாதிரிக் கிராமங்களில் அமைக்கப்பட்ட தலா 24 வீடுகளை ஜனாதிபதியும், இந்திய வெளிவிவகார அமைச்சரும் மக்கள் பாவனைக்காக கையளித்தனர்.

இந்தியாவின் 06 மில்லியன் நிதி உதவியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையில் சமுத்திர மீட்பு தொடர்பாடல் மையமும் ஜனாதிபதி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கொழும்பில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் ஒரு மையம், அம்பாந்தோட்டையில் துணை மையம், காலி, அருகம்பே, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்லாறு, பருத்தித்துறை, மொல்லிக்குளம் ஆகிய பிரதேசங்களின் ஆளில்லா கட்டுப்பாட்டு மையங்களும் அடங்கும்.

வெளிவிவகார அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். – என்றுள்ளது.

இதேவேளை, இந்திய வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கர், இன்று மாலை 5 மணியளவில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அக்கட்சிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து வடக்கு – கிழக்கு நிலைமை தொடர்பில் பேசவுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி இன்று காலை திடீரெனச் சுகவீனமடைந்துள்ளமையால் மாலை நடைபெறும் மேற்படி சந்திப்பில் கலந்துகொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்கட்டிச்சோலையில் ஏராளமானோர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைவு!



(வி.ரி. சகாதேவராஜா)

கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் இருந்து ஏராளமானோர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் அங்கத்துவம் பெற்று இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொக்கட்டிச்சோலை பட்டிப்பளை பிராந்திய உதவி இணைப்பாளரும் முன்னாள் தவிசாளரும் அதிபருமான சி. அகிலேஸ்வரன் ஏற்பாட்டில் அவர் முன்னிலையில் புதிய அங்கத்தினர்களை இணைக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியில் 20 லட்சம் புதிய அங்கத்துவர்களை சேர்க்கும் தேசிய வேலைத் திட்டத்தில் ஓரங்கமாக இந்த நிகழ்வு முதலைக்குடாவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட பிரச்சார செயலாளர் வெ.சுதாகரன், ஊடக செயலாளர் நா.பூவண்ணன், இளைஞர் அணித் தலைவர் த.சுதர்சன், நிர்வாகச் செயலாளர் ஜோன் கென்னத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கேடே நினைக்கும் ரணில்

'கெடுவான் கேடு நினைப்பான்.'
'கெடுகுடி சொற் கேளாது.'

- இவையெல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இப்போதைய போக்கை எண்ணும் போது தோன்றும் விடயங்கள்.

ஒரு ஜனநாயக நாட்டில் சட்ட முறையான - நீதி, நேர்மையான - ஒழுங்கமைவான - ஆட்சி நிலவுவதற்கு முதல் முக்கியமான விடயம் அந்த நாட்டின் சட்டமாக்கல்துறை (நாடாளுமன்றம்), நிறைவேற்றதிகாரம், நீதித்துறை ஆகிய மூன்றும் சுயாதினமாகவும், செம்மையாகவும், ஒன்றில் ஒன்று தங்காமல் சுதந்திரமாகவும் இயங்க வேண்டும் என்பதாகும்.

ஆனால், நிறைவேற்றதிகாரத்தைத் தமது கைவசம் வைத்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு வெகுமதியாக கிடைத்த தற்போதைய அந்த ஜனாதிபதி பதவியின் அந்தத்தில் நின்று கொண்டு சட்டத்தின் ஆட்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தி, அதிகாரத்தில் தாம் நீடிக்கப் பெரும் குழப்பங்கள் பண்ணுகின்றார்.

சட்டத்திற்கு மாறாக, தம்மிஷ்டப்படி - அதிகாரங்களை கையில் வைத்தபடி - அவர் நடத்தும் திருக்கூத்துகள் - ஜனநாயக விரோத போக்குகள் - மீண்டும் ஒரு தடவை மக்களை சந்தித்து வாக்கு கேட்கும் நோக்கு அவருக்கு இல்லவே இல்லை என்ற கருத்தைத்தான் தந்து நிற்கின்றன. அவரது தற்போதைய அதிகாரத் திமிர்த்தன சேஷ்டைகள் அதனைத்தான் புலப்படுத்தி நிற்கின்றன.

ஏற்கனவே பொலிஸ்மா அதிபரின் நியமன விடயத்தில் அரசமைப்புக் கவுன்சிலின் தீர்மானத்தை சபாநாயகரை கொண்டு புரட்டி எழுத வைத்து, அதன் அடிப்படையில் குளறுபடி பண்ணினார் அதி உத்தமர். அது விடயத்தில் விரைந்து நீதி பெற்றுத் தராமல், காலத்தை இழுத்தடிக்கின்றது நீதிக்கு பொறுப்பான நாட்டின் நீதித்துறை.

இப்போது அந்த நீதித்துறையையே படுகொச்சையாக - கேவலமாக - சித்திரித்து, அச்சுறுத்தும் விதத்தில் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக விமர்சிக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

உயர்நீதிமன்றத்தின் முடிவுகளை - தீர்மானங்களை - புறம் தள்ளியே சட்டங்களை ஆக்குவோம் என்று நாடாளுமன்றத்திலேயே கொக்கரிக்கும் அளவுக்கு ஜனாதிபதியின் அதிகாரத் திமிர்த்தனம் உச்சத்தைத் தொட்டிருக்கின்றது.

இருக்கும் சட்டமா அதிபரின் பதவிக் காலம் இன்னும் ஏழு நாள்களில் - ஒரு வாரத்தில் - முடிகின்றது. அதற்கு மேல் ஆறு மாதங்களுக்கு அவருக்குப் பதவி நீடிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி செய்த பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் நிராகரித்து விட்டது.

ஆனால், அந்த முடிவை உதாசீனம் செய்து, புறமொதுக்கி, சட்டமா அதிபருக்குத் தான் பதவி நீடிப்பு வழங்குவார் என்ற சாரப்பட நேற்றைய அமைச்சரவையில் ஜனாதிபதி அறிவித்தார் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

தமது பதவியை நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் மேலும் ஒரு வருடத்திற்காவது நீடிப்பதற்கு முயலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு வசதியாகவே இருக்கும் சட்டமா அதிபரின் பதவியை நீடிக்கச் செய்ய எத்தனிக்கின்றார் என்று தோன்றுகின்றது.

ஆயினும் சட்டமா அதிபர் பதவி நீடிப்பு தொடர்பாக ஏற்கனவே முடிவு கட்டப்பட்ட முன்னுதாரண வழக்கொன்று இருக்கின்றது.

2008 செப்டம்பரில் இதேபோன்று ஓய்வு பெறவேண்டிய சட்டமா அதிபர் சி.ஆர்.டி சில்வாவின் பதவிக்காலத்தை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம் இஷ்டப்படி நீடித்தார். அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தது. அப்போது சிரேஷ்ட சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி அதற்காக வாதிட்டார்.

வழக்கை விசாரித்த சர்ச்சைக்குரிய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இரண்டு நாள்கள் கால அவகாசம் வழங்குவதாகவும், அதற்குள் சட்டமா அதிபர் பதவியில் இருப்பவர் ஒரு தீர்மானம் எடுக்காவிட்டால் நீதிமன்றம் உத்தரவை வழங்கும் என்றும் கூறினார். அடுத்த நாளே அந்த சட்டமா அதிபர் தமது ஓய்வுக்கான பத்திரத்தைச் சமர்ப்பித்து தம்மைச் சேவையிலிருந்து விடுவித்துக் கொண்டார்.

அப்படி ஒரு நிலை வருவதற்கான திசையை நோக்கி இப்போது ஜனாதிபதி ரணில் நகர்கின்றார் என்றே தோன்றுகின்றது.

இன்னொரு தடவை தேர்தலில் மக்களை சந்திப்பதில்லையாயின் பதவியை விட்டு விலக முன்னர் எதனையும் செய்து பார்க்கலாம் என்று துணிந்து விட்டார் போலும் ரணில். கெடுகுடி சொற் கேளாது!



# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனை மாணவனுக்கு வரவேற்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை, இந்தியாவுக்கு இடையிலான பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக்கடந்த இலங்கையின் முதலாவது முஸ்லீம் என்னும் சிறப்புச் சாதனையைத் தனதாக்கிக் கொண்ட திருகோணமலை ஸாஹிராக் கல்லூரி மாணவன் இளம் சாதனைப் புயல் ஹஸன் ஸலாமாவுக்கு நேற்று (19) புல்மோட்டையில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வில் பெரும் திரளாகப் பொது மக்கள் கலந்து கொண்டனர்.








# சட்ட விரோதமாக மாணிக்க கல் அகன்ற நால்வருக்குப் பிணை!

(மஸ்கெலியா)

சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த நால்வரை பொகவந்தலாவ பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பொகவந்தலாவ ராணி காடு பகுதியை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

பொகவந்தலாவ ராணி காடு தோட்ட தெரேசியா பிரிவில் சட்ட விரோதமான முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு உள்ளனர் என்று பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைக்க பெற்ற இரகசிய தகவல்களைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்குச் சென்று சுற்றி வளைப்பை மேற்கொண்ட பொலிஸார் அங்கு சட்ட விரோதமாக முறையில் மாணிக்க கற்கள் அகன்ற நால்வரைக் கைது செய்துள்ளனர்.



இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நேற்று பொலிஸ் பிணையில் விடுதலை செய்யபட்டனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.





# உகந்தை முருகன் ஆலய ஆடிவேல் திருவிழா தொடர்பில் கலந்துரையாடல்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவுக்கான உபயகாரர்களுடனான கலந்துரையாடல் நேற்று (19) புதன்கிழமை நடைபெற்றது.

உகந்த மலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் ஜூலை 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 22 ஆம் திகதி சமுத்திர தீர்த்தத்துடன் நிறைவடையவுள்ளது.

லகுகல பிரதேச செயலக ஏற்பாட்டில் இடம்பெற்ற கூட்டத்தில ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க. கு. சீதாராம் குருக்களால் திருவிழா சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்டது.

வருடாந்த ஆடிவேல் விழா ஜூலை மாதம் 05 ஆம் திகதி பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு 06 ஆம் திகதி காலை 11 மணியளவில் கொடியேற்ற பூஜை இடம்பெறும். ஆலய வண்ணக்கர் சுதுநிலமே சுதா முன்னிலையில் பிரதம குரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் கொடியை ஏற்றி வைப்பார்.

தொடர்ச்சியாக தினமும் திருவிழா இடம்பெற்று இறுதி நாள் 22 ஆம் திகதி சமுத்திர தீர்த்தம் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து வைரவர் பூசை இடம் பெறும்.

விசேடமாக 12 ஆம் திகதி காலை கும்பாபிஷேக தின சங்கபிஷேகம் இடம்பெறவுள்ளது.

# பொத்துவில் ஆஸ்பத்திரி உணவகத்தில் சோதனை

(எம். எப். றிபாஸ்)

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் விஜயம் செய்தனர்.



பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறூக் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சென்று சிற்றுண்டிச்சாலை மற்றும் சமையலறை சுற்றுச் சூழல் என்பவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

சிற்றுண்டிச்சாலை திருப்திகரமாக காணப்பட்ட போதிலும் சிறுசிறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டு அவற்றைத் திருத்தியமைக்கக் கால அவகாசம் வழங்கப்பட்டது.

# தியகலவில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த வான் சாரதி உயிரிழப்பு

(மஸ்கெலியா)

தியகல பகுதியில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த வான் சாரதி சிகிச்சை பலனின்றி நேற்று இரவு நாவலப்பிட்டி ஆதார வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

கண்டியில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸும் ஹட்டனில் இருந்து கினிகத்தேன சென்ற வானும் நேருக்கு நேர் தியகல பகுதியில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

வான் சாரதியான நிர்மலராஜன் பிரியதர்ஷன் ( வயது-32) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கினிகத்தேன மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.



# சம்மாந்துறை வலய வலைப்பந்தாட்ட சாம்பியனாக அன்னமலை ம.வி.!

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய வலைப்பந்தாட்ட சாம்பியனாக நாவிதன் வெளி அன்னமலை மகா வித்தியாலய அணி வெற்றி வாகை சூடியது.

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டு போட்டி நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் வலைப்பந்தாட்ட போட்டி நேற்று (19) புதன்கிழமை சம்மாந்துறை அல் மல்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது .

16 வயதுக்கு உட்பட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் வீரமுனை ராமகிருஷ்ணா மகாவித்தியாலயம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், சம்மாந்துறை அல் மல்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகளைத் தோற்கடித்து நாவிதன் வெளி அன்னமலை மகா வித்தியாலய அணிச் சாம்பியனாக வெற்றி வாகை சூடியது.

சம்மாந்துறை வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபரா முன்னிலையில் போட்டி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.





# யானை–மனிதன் தீராத மோதல்...!

உலகில் யானை–மனித மோதலில் முதலிடத்தில் வகிக்கும் நாடாக இலங்கை காணப்படுகிறது. இதன் காரணமாக வருடமொன்றுக்கு 400 யானைகள் உயிரிழப்பதுடன் 100 பொது மக்களும் உயிரிழக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றது.

யானை - மனித மோதலுக்குத் தீர்வு காண்பதில் இலங்கையில் இன்னும் முழுமையான வெற்றியை பதிவு செய்ய முடியவில்லை.

காலத்துக்கு ஏற்ற வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவதில் அரசும் தோல்வி கண்டுள்ளது. யானை - மனித மோதலால் அதிக யானைகள் இறப்பதுடன் மனிதர்களின் உயிர்களும் பறிபோன ஆண்டாக 2022 ஆம் ஆண்டு காணப்படுகிறது என்று இலங்கை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அறிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி 2022 ஆம் ஆண்டு இலங்கையில் பலியாகிய யானைகளின் எண்ணிக்கை 439 மற்றும் மனித உயிரிழப்புக்கள் 148 ஆகவும் பதிவாகியுள்ளன.

இலங்கையில் வருடாந்தம் 250 யானைகள் இறக்கின்றன. 50 மனிதர்கள் வரையில் யானைகளால் கொல்லப்படுகின்றனர்.

யானை – மனித மோதல்களுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக மனிதர்களால் முன்னெடுக்கப்படுகின்ற முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் அமைகின்றன.

அரச மற்றும் தனியார்களால் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் காடழிப்புகள் காரணமாக யானைகளின் வாழ்வியலில் ஏற்படுகின்ற மாறுதல்கள், பயன்படுத்தக் கூடிய வளமான வாழ்விடங்கள் இல்லாமல் போதல் அல்லது குறைவடைதல், காட்டு யானைகளுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்படுதல் மற்றும் யானைகளின் நடைபாதைகளை தடை செய்தல் போன்ற காரணங்களால் காட்டு யானைகள் கிராமங்களுக்குள், மனிதர்கள் வசிக்கும் இடங்களுக்குள் பிரவேசிக்கின்றன. அதனால் யானை – மனித மோதல் வெகுவாக அதிகரித்துள்ளது.

2013 - 2017 வரையிலான காலப் பகதியில் யானை – மனித மோதலால்

யானைகளின் மரணம் 1177 ஆகவும் மனித இறப்புக்கள் 375 ஆகவும், உடல் ரீதியான சேதங்கள் 357 ஆகவும் ஆதனங்களுக்கான சேதங்கள் 6458 ஆகவும் பதிவாகியுள்ளன.

2018 இல் 319 யானைகள் இறப்பு மற்றும் 96 மனித மரணங்கள். 2019 இல் 405 யானைகள் இறப்பு பதிவாகியுள்ளன.

இலங்கையில் யானை – மனித மோதல் பிரதானமாக எட்டு மாகாணங்களில் 58 பிரதேச செயலர் பிரிவுகளில் பரந்து காணப்படுகின்றன. இவற்றுள் அதிக மோதல் காணப்படும் பிரதேசமாக வெள்ளவாய, லுணுகம வெஹார, அம்பாறை, உருளை, போரத்தீவுப் பற்று, கோரளைப்பற்று தெற்கு, மகியங்கனை, தெஹி அத்தகண்டிய, வில்கமுவ, திம்புலாகல, வெலகந்த, தெகிராவ, பளுகஸ் வெவ, தில்வெரட்டிய ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தின் வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் வழங்கிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் 2018, 2019, 2023 ஆகிய வருடங்களில் சுமார் 61 யானைகளின் இறப்பு பதிவாகியுள்ளது. இவற்றில் இறப்பு 2018 ஆம் ஆண்டு 12 ஆண் யானைகள், 2019 ஆம் ஆண்டு 18 ஆண் யானைகள், 2023 ஆம் ஆண்டு 17 ஆண் யானைகள் என்று பதிவாகியுள்ளது.

யானை - மனித மோதலில் யானைகளின் உயிரிழப்பு விகிதமே அதிகமாக உள்ளது.

யானை - மனித மோதலால் அதிக மனித உயிரிழப்புக்கள் சம்பவிக்கும் நாடுகளில் இரண்டாவதாக இலங்கை காணப்படுகிறது. யானை – மனித மோதலுக்கு தீர்வு காண்பதற்காக காலத்துக்கு ஏற்ற வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசு ஆர்வம் கொண்டுள்ள நிலையில் பொது மக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைப்பதில்லை.

யானைகளுக்காக பாதுகாப்பு வேலிகளை அமைக்கும்போது தமது காணிகளில் எல்லைகள் இழக்கப்படும் என சில பகுதிகளில் மக்கள் காண்பிக்கும் எதிர்ப்புகளால்

தொடர்ச்சி▼

# யானை–மனிதன் தீராத மோதல்...!

**தொடர்ச்சி▲**

பணியை தொடர்ந்து முன்னெடுக்க முடியாதுள்ளது என அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மக்களது அறியாமை மற்றும் விழிப்புணர்வற்ற தன்மைகளால் வளமிக்க யானைகளை இலங்கை இழந்து கொண்டிருக்கிறது. யானைகள் பிரதேசங்களில் ஊடுருவும் சந்தர்ப்பங்களில் மக்கள் தவறான வழிமுறைகளை கையாள்கின்றனர்.பழங்களில் நஞ்சுப் பொருட்களை வைத்தல், யானைகளுக்குத் தீ வைத்தல், துப்பாக்கியால் யானைகளை சுடுதல் போன்ற தவறான செயற்பாடுகளால் இறக்கும் யானைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதை தற்காலத்தில் அவதானிக்க முடிகிறது.

யானைகளின்இறப்பைக்குறைப்பதற்குப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவற்றை முறையாக அமுல்படுத்தப்படாமை காரணமாக யானைகளின் உயிரிழப்புகளை குறைப்பது இன்று வரையும் முடியாமல் உள்ளமை வெளிப்படையான உண்மையாகும். இதனால் யானைகள் மற்றும் மனிதர்களின் உயிரிழப்புகள் தொடர்ச்சியாக காணப்படுகிறது. எனவே மனிதர்களையும் யானைகளையும் காப்பதற்கும், சொத்துக்களை பாதுகாக்கவும் உடனடியாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் யானைகளின் தாக்குதலால் சம்பவிக்கும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 24 உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அண்மைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா மற்றும் சம்பூர் பிரதேசத்தில் தொடர்ச்சியாக யானை தாக்குதலுக்கு உள்ளாகி மூவர் உயிரிழந்துள்ளனர். முஹைதீன் பிச்சை முகம்மது அனிபா (வயது 61), அப்துல் சத்தார் முகம்மது அயாஸ் (வயது 26), வைரமுத்து திருமகன் (வயது 41).

தமது விளைநிலங்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் வேளையிலும், விறகெடுப்பதற்காக வனப்பகுதிக்கு சென்ற வேளையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படுகின்ற போதிலும் அப்பணம் மனித உயிருக்கு ஈடாகுமா? என்ற கேள்வி பாதிக்கப்பட்ட குடும்பத்தாரால் அரசு தரப்பை நோக்கி எழுப்பப்படுகிறது.



குடும்பத் தலைவர்கள் மாத்திரம் உழைக்கும் பட்சத்தில் தற்போது அவர்களையும் பறிகொடுத்துவிட்டு, பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது மி–குந்த சவாலான விடயமாகும்.

கிராமப்புற மக்களின் வாழ்வாதார பயிர்களான தென்னை, வாழை, கரும்பு முதலான பயிர்களையும் யானைகள் அழிவடையச் செய்கின்றன. இதற்கான இழப்பீடு என்பது விரைவாக அரசு வழங்குவதில்லை என்பது பாதிக்கப்பட்ட மக்களால் குற்றச்சாட்டாக முன்வைக்கப்படுகிறது. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் இங்கு கேள்விக்குறியாகவுள்ளது.

யானைகளின் தாக்குதல்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு யானைத் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இது காடுகளை அண்மித்துள்ள கிராமங்களுக்கு மிகவும் கட்டாயமாகிறது. எனினும் மின்சார வேலிகள் பல யானைகளின் உயிரிழப்புகளுக்கு காரணமாவதோடு செலவுமிக்க செயல்பாடாகவும் இருக்கின்றது.

மின்சார வேலிகள் விரைவாக ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசு தரப்பு தாமதமாகச் செயல்படுவதால் பொது மக்கள் தமது விவசாய நிலங்களை பாதுகாக்கும் நோக்கில் தமது சொந்த செலவில் மின்சார வேலிகளை அமைப்பதாக திருகோணமலை பிரதேச மக்கள் கூறுகின்றனர். மின்சார வேலிகளை அமைக்கும் பணியில் அரசு பக்க சார்பாக செயல்படும் போக்கு உள்ளது என்றும் மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்

.இதனால் இயற்கை முறையிலான யானை தடுப்பு வேலிகளை அமைக்கும் பணியில் மக்கள் ஈடுபடுகின்றனர். அதாவது எல்லைப் புறங்களில் தேனீ வளர்ப்பை மேற்கொள்வதன் மூலமும் குறிப்பிட்ட தூர இடைவெளியில் பனை மரங்களை நடுவதன் மூலமும் யானைகளிடமிருந்து மிகக்குறைவான செலவில் மக்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.

இந்த முறையின் ஊடாக இரட்டிப்புப் பயன்களை மக்கள் அடையக்கூடும். இந்த முறையை கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச விவசாயிகள்தற்போதுநடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

யானைகளின் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதங்கமும் கோவமும் அவர்களைத் தவறான பாதைக்கு வழி நடத்துகின்றன. யானை உண்ணும்

**தொடர்ச்சி▼**




# சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கு கார்மேல் பற்றிமாவில் சின்னம் சூட்டல்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் தலைமையில் நேற்று (19) புதன்கிழமை நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாகப் பற்றிமா கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் ஸ்ரிபன் மத்தியூ கலந்துகொண்டார்.

கௌரவ அதிதியாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரங்கா சந்ரசேன மற்றும் சிறப்பு அதிதிகளாக முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆர்.சுகிர்தராஜன், முன்னாள் பற்றிமா கல்லூரி பிரதி அதிபர் திருமதி பி.திருநாவுக்கரசு, கல்முனை வலய ஆசிரிய ஆலோசகர் ரி.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.






கடந்தவருடம் தெரிவு செய்யப்பட்டு சிரேஷ்ட மாணவத் தலைவர்களாகக் கடமையாற்றிய மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# யானை–மனிதன் தீராத மோதல்…!

**தொடர்ச்சி▲**

பழத்தில் சீமெந்து மற்றும் வெடி பொருள்களை வைத்து கொலை செய்யும் போக்கு பரவலாக உள்ளமை இப்பிரதேசங்களில் அவதானிக்கப்பட்டது. இத்தகைய செயல்பாடுகளால் எமது நாட்டின் மிகப் பெரியசொத்தானயானைகள்கொல்லப்படுகின்றன. ஓர் யானையை இழப்பதென்பது, ஒரு காட்டை இழப்பதற்கு சமம். ஒரு யானை தன் வாழ்நாளில் பதினெட்டு லட்சம் மரங்களை உருவாக்குகின்றது. இத்தகைய பரப்பளவு கொண்ட காடுகளை உருவாக்குவதில் யானைகளின் பங்கு அளப்பெரியது. யானைகளை பாதுகாப்பது என்பது ஒரு நாட்டினுடைய வளத்தைப் பாதுகாப்பதற்கு சமமானது.

யானைகள் கொல்லப்படுவதையும் தடுத்து நிறுத்த வேண்டும். அதேவேளை, மக்களின் சொத்துக்கள், உயிர்களைப் பாதுகாக்க வேண்டும். எனவே யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஒரு சக வாழ்வை கொண்டு வருவதே இங்கு கவனத்துக்கு உரிய விடயமாகும்.

யானைகளுக்கும் பாதிப்பின்றி மக்களுக்கும் பாதிப்பின்றி ஆரோக்கியமானதும் சாதகமான சூழல் உருவாக்கப்பட வேண்டும். இதன் ஊடாகவே யானை மனித மோதலைத் தடுக்க முடியும். அந்த அடிப்படையில் சமூக மட்ட வேலி அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தல், இயற்கை முறையிலான யானை தடுப்பு வேலிகளை முன்னெடுப்பதன் ஊடாக யானை மனிதனுக்கும் இடையிலான மோதல்களுக்கான தீர்வுகளை காண முடியும்.

**ச..தனுஷ்கா,**
**ஊடகத்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# விடத்தல் தீவு கண்டல் தாவரக் காணிகள் விடுவிப்பு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது!







**(மன்னார்)**

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய மன்னார் மாவட்டம் விடத்தல் தீவு இயற்கை சரணாலயம் என்று குறிப்பிடப்பட்ட பகுதி நிறைவுக்கு வருவதாக கடந்த மாதம் 6 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறு விடத்தல் தீவு பகுதியில் வனவள திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் கடல்சார் பூங்கா, கடல் வேளாண்மைக்கு விடுவிக்கப்படுவதாக வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அந்தக் காணி விடுவிப்பு தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன.

கடந்த வாரம் இடம் பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது இந்தக் காணி விடுவிக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கையான கண்டல் காடுகளை அழித்து மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்து அமைக்கப்படும் கடல்சார் பூங்காவுக்கு அனுமதி வழங்க முடியாது என்று இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்து வெளியிட்டார்.

அதேநேரம் மீனவர்கள் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்ட போது, இந்த 400 ஏக்கர் நிலமும் ஒரு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பண்ணை அமைப்பதற்கு வழங்குவதற்காகவே விடுவிக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் மீனவர்கள் மத்தியில் காணப்படுகிறது என்று தெரிவித்தனர்.

வெறுமனே அதை 400 ஏக்கர் பிரச்சினையாகக் கருத கூடாது எனவும் அதைத் தொடர்ந்து விடத்தல் தீவு பகுதியோடு சேர்ந்த 1400 ஏக்கர் காணிகள் ஆபத்தில் இருப்பவும் வடமாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் ஆலம் குறிப்பிட்டிருந்தார்.

அதேநேரம் இந்தக் காணி விடுவிக்கப்பட்டமை தொடர்பாகத் தங்களுக்கு எந்த ஒரு அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை எனவும் 1000 ஏக்கர் காணிகள் விடுவிப்பு தொடர்பில் அளவீடுகள் இடம்பெற்ற நிலையில் 400 ஏக்கராகக் குறைக்கப்பட்டுத் தற்போது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது என்று மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் மன்னார் மாவட்டக் காணிகளுக்கு பொறுப்பான மேலதிக அரச அதிபர் இது தொடர்பாகத் தெரிவித்த போது, இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியானதைத் தொடர்ந்து மன்னார் வனவள திணைக்கள அதிகாரிகளிடமும் கொழும்பு மாவட்ட உயர் அதிகாரிகளிடமும் இது தொடர்பில் தகவல் அறிய முற்பட்ட வேளை இது தொடர்பில் அவர்களுக்கே தெரியாத நிலையே காணப்படுகிறது என்று தெரிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சிங்கள மொழியிலே காணப்படுகிறது. அதில் தெரிவிக்கப்பட்ட இணைப்புகள் எதுவும் வர்த்தமானியில் காணப்படவில்லை. அதில் ஒழுங்கான விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. அவ் வர்த்தமானி தொடர்பில் விளக்கம் இல்லை என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த விடுவிக்கப்பட்ட காணிகள் வேறு எந்த நிறுவனங்களுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கோ வழங்காது அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்.– வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில், விடத்தல் தீவு விடுவிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு பயன்படுத்தப்படுகிறது என்று கடற்றொழில் அமைச்சால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடத்தல் தீவு என்பது கடலால் சூழப்பட்ட பிரதேசம். அது பூகோள ரீதியில் பெறுமதியான பிரதேசம். பருவ காலத்தில் மீன் இனங்கள் அந்தப் பிரதேசத்திலேயே இனப்பெருக்கம் செய்து ஆழ் கடலுக்கு செல்கின்றன. இலங்கையின் மிகப்பெரிய மீன் உற்பத்தி வங்கி. அதாவது இந்த திணைக்களங்களால் அறியப்படாத மீன் உற்பத்தி வங்கி. இதை எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்துவதாக கூறி மிக பலம் பொருந்திய பல்தேசிய நிறுவனங்களுக்கு, மக்கள் என்ற போர்வையில் மக்களை பினாமியாக வைத்து விற்பனை செய்வதற்கான மறைமுகமான திட்டமாகத்தான் இது உள்ளது என்று அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த காணி விடுவிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அமைச்சாலோ, அமைச்சராலோ வழங்கப்படாத நிலையில் இந்தக் காணிகளை விடுவிக்க வேண்டாம் எனவும் அவை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் கோரி விரைவில் விடத்தல் தீவு மக்களால் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாய்களுக்கான பராமரிப்பு நிலையம் வாகரையில் திறந்து வைத்த ஆளுநர்!



(அஸ்ஹர் இப்றாஹிம், எஸ்.கீதபொன்கலன்)

கைவிடப்பட்ட நாய்களுக்கும் நாய்க்குட்டிகளுக்கும் ஊட்டச்சத்தான உணவுடன் பாதுகாப்பான இருப்பிடம் வழங்கும் நோக்கில் வாகரையில் நாய் பராமரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று இதனைத் திறந்து (19) வைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் அரசால் செயற்படுத்தப்படும் முதல் திட்டம் இதுவாகும்.





# பிரான்ஸில் இடம்பெறும் இசைவேள்வி

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரான்ஸ் தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தின் இசைவேள்வி -2024 கர்நாடக சங்கீத இசைத் திறன் போட்டிகள் கடந்த (15) சனிக்கிழமை பொண்டிப் பகுதியில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் மாவீரர் பொதுப் படத்துக்கான ஈகைச்சுடரை 20.04. 1998 அன்று மணலாற்றில் வீரச் சாவடைந்த மேஜர் விடுதலையின் சகோதரி ஏற்றிவைத்து மலர் வணக்கம் செலுத்தினார்.



அகவணக்கத்தைத் தொடர்ந்து போட்டிகள் இடம்பெற்றன.

ஆரம்ப நாள் போட்டிகளின் நடுவர்களாக குரலிசை ஆசிரியர் திருவாட்டி கீர்த்தனா ஆறுமுகதாசன், வீணை இசை ஆசிரியர் திருவாட்டி நோயலா அன்ரன் இமானுவேல், தண்ணுமை ஆசிரியர் திருமிகு அந்தோனிப்பிள்ளை கொன்சலஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின. எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை, 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் இடம்பெறவுள்ளன.



# மாவடிப்பள்ளியில் கீறல் இதழ் வெளியீடு!

(எம். எப். நவாஸ் )

கீறல் இதழ் வெளியீடும் கலந்துரையாடலும் அண்மையில் சம்மாந்துறை, மாவடிப்பள்ளி அஸ்ரஃப் மகா வித்தியாலயத் திறந்த வெளியில் நடைபெற்றன.





உலகக் கவிஞர் சோலைக்கிளி முதன்மைப் பிரதியை அஸிஸ் எம். பாயிஸிடமிருந்து பெற்றுக் கொண்டார். பேராசிரியர் எஸ். எம். அய்யூப், சமுர்த்தி முகாமையாளர் எஸ்.எல். அப்துல் அஸீஸ், ஶ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் அக்கரைப்பற்றுக் கிளை முகாமையாளர் எஸ்.எல். அன்வர், அஷ்ஷெய்க் நிலாம், அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன் , விவசாயப் போதனாசிரியர் கவிஞர் முர்ஷிதா ஷிரீன், கவிஞர் ஜமீல், கவிஞர் முனாஸ், கவிஞர்பானு ஜிஃப்ரி, புத்தக வடிவமைப்பாளர் ஸாஜித் அலி, எம்.எல்.ரீ. அலுவலர் சகோதரர் ஸாகீர், முதுமானி எம்.எல் இஸ்ஹாக் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

கீறல் கலை இலக்கிய சஞ்சிகைக்குப் பரந்துபட்ட வாசகர் வட்டம் ஒன்றை தோற்றுவிப்பது தொடர்பாக விரிவான கருத்துப் பரிமாறல் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளி மத்தியஸ்த சபை உறுப்பினருக்கு சமாதான நீதிவான் நியமனக் கடிதங்கள் வழங்கல்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (19) பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரனின் வழிகாட்டலுக்கு அமைய மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.எம். அன்பாஸ் ஒருங்கிணைப்பில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மத்தியஸ்த சபை உறுப்பினர்களாகச் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றும் உறுப்பினர்களை அவர்களது நன்னடத்தை மற்றும் சமூக சேவை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சமாதான நீதிவான்களாக உள்வாங்கும் நீதி அமைச்சின் திட்டத்துக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட ஏழு உறுப்பினர்களுக்கு இதன் போது அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.





# கள்ளக்குறிச்சியில் 39 பேர் கள்ளச்சாராயத்துக்கு பலி!

## உயிரிழப்பு மேலும் உயரும் பேரச்சம்

கள்ளக்குறிச்சி, ஜூன் 20

தமிழ்நாடு கள்ளக்குறிச்சி கள்ளச் சாராயம் குடித்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 39ஐக் கடந்துள்ளமை தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

கள்ளக்குறிச்சி கருணாபுரத்தில் நேற்று முன்தினம் சாராயம் விற்பனை நடந்துள்ளது. சாராயத்தை வாங்கி குடித்த பலருக்கு நள்ளிரவில் இருந்து கண் எரிச்சல், வயிற்றுவலி போன்ற உபாதைகள் ஏற்பட்டன.

பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல் லூரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வந்தனர். நேற்று காலையில் இருந்து சிகிச்சைக்காக வருபவர்களின் எண் ணிக்கை அதிகரிக்க தொடங்கியது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது.

ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுப வர்களில் பலரது நிலைமை மோசமாக இருப்பதால், பலியானவர்களின் எண் ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று கூறப்பட்டிருந்தது.



இந்நிலையில் விஷ சாராயத்துக்கு பலி எண்ணிக்கை தற்போது 36ஆக உயர்ந்துள்ளதாக இன்று காலை தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக சம்பவம் பற்றி அறிந்த தும் சுகாதாரத்துறையினர் மற்றும் வருவாய்த்துறையினர் கருணாபுரத் துக்கு விரைந்து சென்று ஆய்வு மேற் கொண்டனர்.

இதற்கிடையே விஷ சாராய இறப்புகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துத் தமிழக அரசு நேற்று வெளி யிட்ட செய்திக்குறிப்பில் –

”கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக் குறிச்சி வட்டம் கருணாபுரம் காலனியைச் சேர்ந்த 26 பேர் வாந்தி வயிற்றுவலி, வயிற்றெரிச்சல் போன்ற உபாதைகள் இருப்பதாக தெரிவித்து, கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனக் கள்ளக் குறிச்சி மாவட்ட கலெக்டர் தனது அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் துறை மற்றும் வருவாய்த் துறையினர் மேற்கொண்ட விசாரணை யில், அவர்கள் பாக்கெட் சாராயத்தை அருந்தியிருக்கக்கூடும் என்று சந் தேகிக்கப்படுகிறது.

பாக்கெட் சாராயம் விற்ற கோவிந்த ராஜ் என்கிற கண்ணுகுட்டி (வயது49), பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 200 லிட்டர் விஷ சாராயம் கைப்பற்றப்பட்டு, அவை விழுப்புரம் மண்டல தடய அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டது. சோதனையில், அதில் மெத்தனால் கலந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் முக்கிய குற்றவாளி யாகக் கருதப்படும் சின்னதுரை என்பவர் தலைமறைவாகியுள்ளார். அவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஒரு பெண் உட்பட 3 பேரை போலீசார் கைது செய் துள்ளனர். மேலும் 10 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைக்கு பிறகு அவர்களும் கைது செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

முதலமைச்சருக்கு இந்தச் சம்பவம் பற்றிய தகவல் தெரிய வந்ததுடன், உட னடியாக நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோரை உடனடி யாக கள்ளக்குறிச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று, சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கள்ளக் குறிச்சி மாவட்ட கலெக்டர் ஷ்ரவன்குமார் ஜடாவத் உடனடியாக பணியிடமாற்றம் செய்யப்பட்டு, அவருக்கு பதிலாக எம்.எஸ்.பிரசாந்த் புதிய கலெக்டராக நியமிக்கப்பட்டு உள்ளார். கள்ளக் குறிச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சமய் சிங் மீனா தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, அந்த இடத்தில் ரஜத் சதுர்வேதி பணியமர்த்தப்பட்டுள்ளார்.

அதோடு, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் துணை அத்தியட்சகர் தமிழ்செல்வன், கள்ளக் குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு இன்ஸ்பெக்டர் கவிதா, திருக்கோவி லூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு இன்ஸ்பெக்டர் பாண்டிசெல்வி, திருக் கோவிலூர் சப்-இன்ஸ்பெக்டர் பாரதி மற்றும் அப்பகுதி இன்ஸ்பெக்டர் ஆனந் தன், சப்-இன்ஸ்பெக்டர் ஷிவ்சந்திரன், பொலிஸ் நிலைய எழுத்தர் பாஸ்கரன், சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் மனோஜ், திருக்கோவிலூர் துணை அத்தியட்சகர் ஆகியோரும் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கை தீர விசாரிக்கவும், தக்க மேல்நடவடிக் கைக்காகவும், உடனடியாக சி.பி.சி.ஐ.டி .வசம் ஒப்படைக்க முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்” என்று அதில் கூறப்பட்டுள்ளது.

39 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



# ஹமாஸ் சித்தாந்தத்தை அழிக்க முடியாது

## இஸ்ரேல் பேச்சாளரின் கருத்தால் சர்ச்சை

ஹமாஸை அழிக்கும் பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை. ஹமாஸ் மீண்டும் அச்சுறுத்தலாக உருவாகலாம். ஹமாஸ் அமைப்பை அகற்றுவது செய்ய முடியாத காரியம் என்று இஸ்ரேல் இராணுவத்தின் மூத்த செய்தி தொடர்பாளர் தெரிவித்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இதைத் தொடர்ந்து இஸ்ரேல் அரசு வெளியிட்ட அறிவிப்பில், ஹமாஸ் அமைப்பை அழிக்கும் முடிவில் உறுதியுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு அக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் சார்பில் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ஹமாஸ் அமைப்பை முழுமையாக ஒழிக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் தீவிரம் காட்டி வருகிறது. இதன் விளைவாக பேரழிவு ஏற்பட்டுள்ள போதிலும், ஹமாஸை அழிக்கும் பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை.

ஹமாஸ் உடனான போர் குறித்து பேசிய இஸ்ரேல் மூத்த செய்தி தொடர்பாளர் ஓய்வுபெற்ற ரியல் அட்மிரல் டானியல் ஹகாரி, "ஹமாஸ் அமைப்பை அழிப்பது, மக்களின் கண்களில் மண் வீசுவதற்குச் சமம். இறுதியில் சரியான மாற்று வழியை வழங்காத பட்சத்தில், ஹமாஸ் மீண்டும் அச்சுறுத்தலாக உருவாகலாம். ஹமாஸ் ஒரு சித்தாந்தம். அதனை ஒழிக்கவே முடியாது," என்று தெரிவித்தார்.

இவரது கருத்துக்கள் பெரும் பேசு பொருளாக மாறியது. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், ஹமாஸை முழுமையாக ஒழித்துக் கட்டும் வரை எங்களின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இருக்காது என்று தெரிவித்தார்.

"பிரதமர் நேதன்யாகு தலைமையில் கூடிய அரசியல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான மந்திரிசபை கூட்டத்தில் ஹமாஸ் ராணுவம் மற்றும் நிர்வாக அமைப்பு கொண்ட கட்டமைப்பை முழுமையாக ஒழித்துக் கட்டுவதுதான் இந்த போரின் மிகமுக்கிய குறிக்கோள்களில் ஒன்று தீர்மானிக்கப்பட்டது. இஸ்ரேலிய பாதுகாப்பு படை இதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

மேலும், ஹமாஸ் அமைப்பை சித்தாந்த முறையில்தான் ஹகாரி குறிப்பிட்டார், அவர் தெரிவித்த கருத்துக்கள் தெளிவாகவே இருந்தன என்று இஸ்ரேல் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# காற்று மாசினால் உயிரிழப்புகள் இந்தியா, சீனாவில் மிக அதிகம்

காற்று மாசுப்பாட்டால் 2021 ஆம் ஆண்டில் 81 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர். இதில் இந்தியா, சீனாவில் அதிக அளவில் உயிரழப்புகள் ஏற்பட்டுள்ளன.

சுகாதார விளைவுகள் நிறுவனம் மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் அமைப்பு சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரம் தெரிய வந்துள்ளது.

அந்த அறிக்கையில் தெற்கு ஆசியாவில் இறப்புக்கான முக்கிய காரணமாக காற்று மாசுபாடு உள்ளதாகவும் அதைத் தொடர்ந்து இரத்தம் அழுத்தம், உணவு சரியாக சாப்பிடாமல் இருப்பது மற்றும் புகையிலை ஆகியவையும் உயிரிழப்புகளுக்கு காரணமாக உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் படி, இந்தியாவில் 5 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் மட்டும் ஒரு லட்சத்து 69 ஆயி



ரத்து 400 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தியாவிற்கு அடுத்தப்படியாக நைஜீரியாவில் 1,14,100, பாகிஸ்தானில் 68,100, எத்தியோப்பியா 31,100, வங்காளதேசம் 19,100 குழந்தைகளும் காற்று மாசுபாட்டிற்கு உயிரிழந்துள்ளனர்.

மொத்தமாக இந்தியாவில் 21 லட்சம் மற்றும் சீனாவில் 23 லட்சம் பேர் மரணமடைந்துள்ளனர். முந்தைய ஆண்டை காட்டிலும் 2021 ஆம் ஆண்டில் அதிக இறப்புகள் பதிவாகி உள்ளன. 100 கோடிக்கு அதிகமான மக்கள் தொகையை கொண்ட இந்தியா, சீனாவில் மட்டும் காற்று மாசுப்பாட்டினால் ஏற்படும் இறப்பு விகிதம் உலக அளவில் 54 சத வீதமாக உள்ளது.

இதை தவிர மற்ற நாடுகளை பொறுத்தவரையில் அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் பாகிஸ்தான் முதல் இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 2 லட்சத்து 56 ஆயிரம் பேர், வங்காளதேசம் 2 லட்சத்து 36 ஆயிரத்து 300 பேர், மியான்மர் 1 லட்சத்து ஆயிரத்து 600 பேர் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு ஆசியாவை பொறுத்தவரையில் இந்தோனேசியாவில் அதிக பட்சமாக 2 லட்சத்து 21 ஆயிரத்து 600 பேரும் வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகியவை முறையே 99,700, மற்றும் 98,209 பேரும் உயிரிழந்துள்ளனர். ஆப்பிரிக்காவில் நைஜீரியா (2,06,700) மற்றும் எகிப்து (1,16,500) பேர் உயிரிழந்துள்ளனர்.

கனடா முரசு

பக்கங்கள் 06

வியாழக்கிழமை 20/06/2024

## தெற்கு ஒன்டாரியோவில் இடியுடன் கூடிய மழை!

***வார இறுதி வரைத் தொடரும்***

ஒன்ராரியோ, ஜூன் 20

அதிக வெப்பம் மற்றும் ஈரப்பதன் ஆகியன இடியுடன் கூடிய மழைக்கான இரண்டு முதன்மை இயக்கிகளாகும், மேலும்

C2




# புலம்பெயர்தல் கொள்கைகளில் மாற்றங்கள்;

# ஆட்சேபித்து இன்று மீண்டும் ஆர்ப்பாட்டம்!

***பிரின்ஸ் எட்வேர்ட் ஐலண்ட் மாகாணத்தில் முஸ்தீபு***

கனடாவின் பிரின்ஸ் எட்வேர்ட் ஐலண்ட் மாகாணத்தில், தங்கள் எதிர்காலத்தை பாதிக்கும் வகையில் புலம்பெயர்தல் கொள்கைகளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களை ஆட்சேபித்து, புலம் பெயர்ந்தோர் பலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள்.

இந்நிலையில், இன்று குடியிருப்பு அனுமதி தொடர்பில் முக்கிய முடிவொன்று எடுக்கப்பட உள்ளதால் அவர்கள் மீண்டும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள்.

C2

# கனடாவிலிருந்து தமது நாய்களுடன் அமெ. செல்வோரின் கவனத்திற்கு...!

அமெரிக்கா செல்லும் கனடியர்கள் தம்முடன் நாய்களை எடுத்துச் செல்வது தொடர்பில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க எல்லை பகுதியை கடக்கும் கனடியர்கள் இந்த புதிய நடைமுறையை எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் முதல் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தரை வழியாக அல்லது வான் வழியாக நாய் களை அழைத்துச் செல்லும் கனடியர்கள் சில சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாய்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு இருக்க வேண்டும் எனவும் நாய்களில் மைக்ரோசிப் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாய்களின் உரிமையாளர்கள் அமெரிக்காவிற்கு பயணங்களை மேற்கொள்ளும்

C2






# பணியாளர்களின் பணிப் புறக்கணிப்பால் நாற்பது விமானப் பயண சேவைகள் ரத்து

கனடாவின் முன்னணி விமான சேவை நிறுவனங்களில் ஒன்றான வெஸ்ட் ஜெட் விமான சேவை நிறுவனத்தின் பணியாளர்கள், பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர்.

விமான சேவை நிறுவனத்தின் பராமரிப்பு பணியாளர்களே இவ்வாறு இன்றைய தினம் தொழிற்சங்க போராட்டத்தில் குதிக்க உள்ளனர்.

இதன் காரண காரணமாக வெஸ்ட் ஜெட் விமான சேவை நிறுவனம் சுமார் 40 விமான பயணங்களை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

இந்த விமான பயணங்கள் ரத்து செய்த காரணத்தினால் சுமார் 6,500 பயணிகள் பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்ச சங்கம் எடுத்த கோரிக் கைகளுக்கு உரிய பதில் கிடைக்க வில்லை, அதன் காரணமாக போராட் டத்தில் குதிப்பதாக பணியாளர்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலம்பெயர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு அறிவித்துள்ள புலம்பெயர்தல் கொள்கை மாற்றம் கனடாவில் கல்வி கற்ற மற்றும் கல்வி கற்றுவரும் பலர் நாடுகடத்தப்படும் அபாயத்தை உருவாக் கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்தப் புலம்பெயர்தல் கொள்கை மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே கனடாவின் பிரின்ஸ் எட்வேர்ட் ஐலண்ட் மாகாணத்தில் வாழும் புலம்பெயர்ந்தோர் ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டுவருகிறார்கள்.

இன்று, அதாவது, ஜூன் மாதம் 20 ஆம் திகதி, குடியிருப்பு அனுமதி தொடர் பில் தேர்வொன்றை (draw for nominations to the Provincial Nominee Program - PNP) அரசு நடத்த உள்ளது.

ஆகவே, இன்று மீண்டும் ஒரு பிரம் மாண்ட ஆர்ப்பாட்டத்தை நடத்த புலம் பெயர்ந்தோர் முடிவு செய்துள்ளார்கள்.

அனைத்து சமுதாயங்களை சேர்ந்த வர்களும், தீவு மக்களும் தங்களுக்கு ஆதரவாக தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து நிற்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

அப்போதுதான், எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விடயம் அரசுக்குப் புரியும் என்று கூறியுள்ள ஆர்ப்பாட்ட அமைப்பாளர்கள் 1,000 பேராவது கூடினால் இந்த கொள்கை மாற்றங்கள் எத்தனை பேரை பாதிக்க வுள்ளது என்பதை உணர்ந்து அரசு தனது முடிவை மாற்றிக்கொள்ளக்கூடும் என்கிறார்கள்.

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரேரிப் பகுதியில் தற்போது வெப்ப மண்டலம் நிறுத்தப்பட்டுள்ளதால், இடியுடன் கூடிய மழைக்கான ஆபத்து வியாழன் வரை பரவி, தெற்கு ஒன் டாரியோ முழுவதும் வார இறுதி வரை தொடரும் என சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

வளிமண்டலம் இன்று வியாழக் கிழமை ஒரு நிலையற்ற நிலையில் இருக்கும், எனவே கூடுதல் இடியுடன் கூடிய செயல்பாடு சாத்தியமாகும் எனவும் அது எதிர்வுகூறியுள்ளது.

மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட புயல்கள் மதியம் வரை உள்நாட்டில் உருவாகும். நாள் முழுவதும் சீரற்ற வெப்பமூட்டும் நிலையுடன் ஒன்றிணை வது, சில பகுதிகளை விட புயல் நடவ டிக்கைக்கு சாதகமாக இருக்கும் என சுற்றுச்சூழல் கனடா குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், அவை பலனளிக் கும் பட்சத்தில், சில இடியுடன் கூடிய மழைப்பொழிவு அச்சுறுத்தல் மற்றும் உள்நாட்டில் பலத்த காற்று காரணமாக கடுமையானதாக மாறும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தில் போதுமான அளவு ஈரப்பதம் உள்ளது, எனவே இந்த புயல்களின் மிகப்பெரிய ஆபத்து கனமழை ஆகும், குறிப்பாக புயல்கள் அதே இடத்தில் மெதுவாக நிறைய மழை பெய்யும் என்பதால்.

## கனடாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது ஒரு புதிய பதிவு ஆவணம் ஒன்றொ பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய நடைமுறைகளை பின் பற்ற தவறும் கனடியர்கள் நாய்களுடன் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய நடைமுறையின் கீழ் நாய்களை அழைத்துச் செல்லும் கனடியர்கள் நூற்றுக்கணக்கான டொலர்களைச் செலவிட நேரும் எனவும் ஆவணங்களை பூர்த்தி செய்ய நேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களையும் விலங்குகளையும் பாதுகாக்கும் நோக்கில் இந்தப் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்படுவ தாக கனடிய மிருக வைத்திய ஒன்றியம் தெரிவித்துள்ளது.



# கனடாவில் நிஜாருக்கான அஞ்சலியால் இந்தியாவுடனான உறவில் பதற்ற நிலை

காலிஸ்தானி பிரிவினைவாத இயக்கத்துடன் தொடர்புடைய ஹர்தீப் சிங் நிஜ்ஜாருக்கு கனேடிய நாடாளுமன்றத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

ஹர்தீப் சிங் நிஜார் என்ற காலிஸ்தான் ஆதரவாளர் கொலையுண்டமையின் முதல் ஆண்டு நினைவாகவே நேற்று முன்தினம் செவ்வாயன்று மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கை, காலிஸ்தான் இயக்கத்தைப் பயங்கரவாத அச்சுறுத்தலாக பார்க்கும் இந்தியாவுடனான உறவில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

அதேசமயம் இந்தியாவிலும், கனடாவில் உள்ள இந்திய சமூகத்தினரிடையேயும் சர்ச்சையையும் பதற்றத்தையும் இது ஏற்படுத்தியுள்ளது.

கனேடிய நாடாளுமன்ற சபாநாயகர் கிரெக் பெர்குஸ், அனைத்து கட்சிகளும் இதை ஏற்றுக்கொண்டன என்று கூறி மௌன அஞ்சலிக்கான அறிவிப்பை வெளியிட்டார்.

நிஜார், 2023 ஜூன் 18 ஆம் திகதி, பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரே பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலைக்கான காரணம் இன்னும் விசாரணையில் உள்ளது.

இந்தியாவில் காலிஸ்தானி தீவிரவாதத்தை ஊக்குவிப்பதிலும் பயங்கரவாதச் செயல்களைத் திட்டமிடுவதிலும் அவர் முக்கிய நபராகக் காணப்பட்டார் என்று கூறப்பட்டது.

நிஜ்ஜாரின் நினைவுநாளில் அவரது நினைவாக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தும் கனடிய நாடாளுமன்றத்தின் முடிவு இந்திய அதிகாரிகளிடமிருந்தும் கனேடிய இந்திய சமூகத்தில் சிலரிடமிருந்தும் விமர்சனக் கருத்துகளை உருவாக்கியுள்ளது.

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய ஒருவரை கௌரவிப்பது தவறான செய்தியை அனுப்புவதாகவும், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய முயற்சிகளை பலவீனப்படுத்துவதாகவும் இந்தியர்கள் வாதிடுகின்றனர்.

இதே நினைவு நாளில், வான்கூவரில் உள்ள இந்திய துணைத் தூதரகம் முன்பு போராட்டங்கள் வெடித்தன.

குறிப்பாக, சில போராட்டக்காரர்கள் 1985 ஆம் ஆண்டு ஏர் இந்தியா குண்டுவெடிப்புடன் தொடர்புடைய நபர்களின் படங்கள் அடங்கிய பதாகைகளை காண்பித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் துயரம் கனடாவின் வரலாற்றில் மோசமான பயங்கரவாத நிகழ்வாக கருதப்படுகிறது. இந்த குண்டுவெடிப்பு காலிஸ்தான் இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ஏர் இந்தியா குண்டுவெடிப்பில் பலியான மக்களை நினைவு கூர்ந்து நினைவு சேவை நடத்தப்படும் என்று வான்கூவரில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் அறிவித்தது.

இந்த நடவடிக்கை, நிஜாருக்குக் கனடா மேற்கொண்ட மௌன அஞ்சலிக்கான தெளிவான பதிலடியாக பார்க்கப்பட்டது.

கனடாவில் பெரும்பான்மையான சிக்கிய மக்கள் தொகை உள்ளது. அவர்களில் கணிசமானோர் இந்தியாவில் தனி சீக்கிய மாநிலத்திற்கான இயக்கத்தை ஆதரிக்கின்றனர். இந்தியா இந்த இயக்கத்தை தேச ஒற்றுமைக்கு எதிரான பிரிவினைவாத அச்சுறுத்தலாகக் கருதுகிறது.

கனடா, காலிஸ்தானி ஆர்வலர்கள் மற்றும் ஆதரவாளர்களின் மையமாக மாறியுள்ளது என இந்தியத் தரப்பில் குறை கூறப்படுகின்றது.

# டொரன்டோவில் துப்பாகிச் சூட்டில் உயிரிழந்த மூவரினதும் விவரங்கள்

ஒன்ராரியோ, ஜூன் 20

டொரன்டோவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானவர்கள் பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை (17 ஆம் திகதி) மாலை டொரன்டோ அலுவலகம் ஒன்றில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலியாகினர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட இருவரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

பலியானவர்கள் 54 வயதான அரஸ் மிஸ்ஸாக், 44 வயதான சமீரா யூசப்பி என செவ்வாய்க்கிழமை (18 ஆம் திகதி) வெளியிட்ட அறிக்கையில் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

பலியானவர்கள் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனத்தின் இணை உரிமையாளர்கள் என தெரியவருகிறது.

இதில் சந்தேகத்திற்குரிய துப்பாக்கிதாரி மரணமடைந்த மூன்றாவது நபர் என புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

46 வயதான அவரது அடையாளம் பொலிஸாரினால் வெளியிடப்படவில்லை.

ஆனாலும் துப்பாக்கிதாரி அலென் கெட்ஸ் என தெரியவருகிறது.





# கியூபெக்கின் இறையாண்மையின் மீதான வாக்கெடுப்பு பொறுப்பற்றது என விசனம்

கியூபெக், ஜூன் 20

கியூபெக்கின் இறையாண்மை மீதான வாக்கெடுப்பு பொறுப்பற்றது என க-கியூபெக் மாகாண முதல்வர் தெரிவித்தார்.

பெரும்பாலான கியூபெக் வாக்காளர்களை இறையாண்மைக்கு ஆதரவாக இல்லை என்பதை ஏற்றுக் கொள்வதாக முதல்வர் பிரான்சுவா லெகோல்ட் கூறியுள்ளார்.

இறையாண்மை மீதான மூன்றாவது வாக்கெடுப்பில் தோல்வி அடைய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கியூபெக் மாகாணத்தின் இன்றைய அவசர நிலை தற்காலிக குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கையை பாதியாகக் குறைப்பதாகும் என பிரான்சுவா லெகோல்ட் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளில், கியூபெக் மக்கள் தொகை 270,000 பேரால் அதிகரித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

2023ஆம் ஆண்டின் இறுதியில், கியூபெக் மாகாணம் மொத்தம் 560,000 நிரந்தரமற்ற குடியிருப்பாளர்களை கொண்டிருந்தது என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.அதேவேளை 2026 தேர்தலில் மூன்றாவது முறையாக போட்டியிடும் திட்டத்தை பிரான்சுவா லெகோல்ட் உறுதிபடுத்தியுள்ளார்.



# வனப்பகுதி கரிபோ மந்தைகளை காப்பதில் கியூபெக் பின்னடைவு

## மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் கரிசனை

கியூபெக், ஜூன் 20 - கியூபெக்கின் அழிந்து வரும் வனப்பகுதி கரிபோ மந்தைகளைப் பாதுகாக்க மத்திய அரசின் அதிகாரங்களைப் பயன்படுத்த வுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஸ்டீவன் கில்பேல்ட் தெரிவித்துள்ளார்.

கியூபெக்கின் மூன்று இடங்களில் உள்ள மந்தைகளைப் பாதுகாப்பதற்காக மத்திய அரசாங்கத்தின் ஆணையைப் பெறுவதற்கான செயல்முறையைத் தொடங்குவதாக கில்பேல்ட் நேற்று கூறியுள்ளார்.

கியூபெக் அவற்றைக் காப்பாற்றுவதற்கான திட்டத்தை உருவாக்கத் தவறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாக்கப்பட்ட வசிப்பிடத்தின் அளவையும் ஆணையின் நோக்கத்தையும் தீர்மானிக்க தனது அரசாங்கம் ஆலோசனை நடத்தும் என்றும் மத்திய அமைச்சர் கூறியுள்ளார்.



# நேட்டோ இலக்கு குறித்து கனடாவுக்கு வலியுறுத்தல்!

ஒன்ராரியோ, ஜூன் 20 -

நேட்டோவின் குறைந்தபட்ச பாதுகாப்பு செலவின இலக்கை கனடா சந்திக்க வேண்டும் என்று நேட்டோ செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஒட்டாவாவுக்கு விஜயம் செய் துள்ள போதே நேட்டோ செயலாளர் நாயகம் ஸ்டோல்டன்பேர்க் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'நேட்டோவில் கனடாவின் நிலைப் பாடு வலுவாக உள்ளது, ஆனால் அதே நேரத்தில் அனைத்து நட்பு நாடு களும் இரண்டு சதவிகிதம் முதலீடு செய்யும் வாக்குறுதியை சிறப்பாகச் செய்யும் என்று நாங்கள் எதிர்பார்க் கிறோம்,' என்று கனடாவின் நேட்டோ சங்கம் நடத்திய நிகழ்வின் போது ஜென்ஸ்ஸ்டோல்டன்பேர்க் கூறியுள்ளார்.

இந்த வாரம் நேட்டோ வெளியிட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில், கனடா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.37 சதவீதத்தை இந்த ஆண்டு பாதுகாப்புக்காக செலவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய பார்மாகெயார் நிகழ்ச்சி 2025 ஏப்ரலில் அறிமுகமாகும்!

ஒன்ராரியோ, ஜூன் 20

2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தேசிய பார்மாகெயார் நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் மார்க் ஹொலன்ட் தெரிவித்துள்ளார்.

லிபரல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியினர் இணைந்து அறிமுகப்படுத்திய தேசிய பார்மாகெயார் நிகழ்ச்சி நாடா ளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

செனட் சபையின் அங்கீகாரத்திற்காக தற்போது அந்த சட்டமூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்கு 1.5 பில்லியன் டொலர்களை லிபரல் கட்சியினர் இதற்காக ஒதுக்கி யுள்ளனர்.






## மொன்ரியல் நகரில் யூத எதிர்ப்பு பல அரசியல்வாதிகள் கண்டனம்

கியூபெக், ஜூன் 20

மொன்ரியல் மாநகர முதல்வர் உள்ளடங்கலாக அரசியல்வாதிகள் நகரத்தில் யூத எதிரப்பினை கண் டித்துள்ளனர்.

மொன்ரியல் நகரில் யூத உரிமையாளர் ஒருவரின் உணவு விடுதியொன்றில் ஜன்னல்களில் துப்பாக்கிக் குண்டு பிரயோகங்கள் குறித்து கருத்து தெரிவித்த போதே அவர்கள் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் வர்த்தகங்களை புறக்கணிக்குமாறு கோரி இணையத்தில் பரவிவரும் பிரசாரத்தில் தமது வர்த்தகமும் பட்டியலிடப்பட்டிருந்ததாக, அந்த உணவு விடுதியின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

'புலஸ்தீனத்தை விடுவியுங்கள்!' என கோரும் ஸ்டிக்கர்கள் தமது விடுதியில் ஒட்டப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையை தீவிரவாத அமைப்பாக அறிவித்தது கனடா அரசு

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையை ( IRGC-யை) தீவிரவாத அமைப்பாக கனடா அரசு அறிவித்து இருப்பது உலக அரங்கில் கவனம் பெற்றுள்ளது.

பல ஆண்டுகளாக எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஈரான் நாட்டை விட்டு வெளியேறியோரிடமிருந்து வந்த அழுத்தங்களுக்கு பிறகு, கனடா இறுதியாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையை ஒரு தீவிரவாத அமைப்பாக பட்டியலிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை உலகளாவிய தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான கனடாவின் முயற்சியாக பார்க்கப்படுகிறது.

மேலும், இதன் காரணமாக, ஆயிரக்கணக்கான ஈரானிய அதிகாரிகள், உயர் ஐ.ஆர்.ஜி.சி. உறுப்பினர்கள் உட்பட பலர் கனடாவுக்குள் நுழைய தடை செய்யப்படுவார்கள்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை என்பது ஈரானில் ஒரு சக்திவாய்ந்த இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பாகும்.

இது உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியுடன் நெருக்கமான உறவையும் சுமார் 190,000 க்கும் மேற்பட்ட செயல்படக்கூடிய பணியாளர்களையும் கொண்டுள்ளது.

இவர்கள் ஈரானின் மூலோபாய ஆயுத திட்டத்தை கண்காணிக்கும் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படையைக் கொண்டுள்ளனர்.

ஐ.ஆர்.ஜி.சி. மத்திய கிழக்கில் தனது இரகசிய நடவடிக்கைப் பிரிவான குத்ஸ் படையின்(Quds Force) மூலம் செல்வாக்கு செலுத்துகிறது.

எனவே குத்ஸ் படை ஏற்கனவே கனடாவால் தீவிரவாதக் குழுவாக பட்டியலிடப்பட்டுள்ளது.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படையை பயங்கரவாத அமைப்பாக கனடா பட்டியலிட்டுள்ளதை பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லபிளாங்க் தெரிவித்துள்ளார்.

'ஈரானுக்கு உள்ளேயும் வெளியேயும் ஈரானிய ஆட்சி தொடர்ந்து மனித உரிமைகளை புறக்கணிக்கிறது. அத்துடன் சர்வதேச விதிகள் அடிப்படையிலான ஒழுங்கை சீர்குலைக்கும் ஈடுபாட்டையும் காட்டுகிறது' என்று அமைச்சர் லபிளாங்க் கூறியுள்ளார்.

ஈரானின் ஆயுதப் படைகளின் கிளையான ஐ.ஆர்.ஜி.சியைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட அரசாங்கத்தைக் கோரும் பிணைப்பு இல்லாத பிரேரணைக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மே மாதம் ஒருமனதாக வாக்களித்துள் ளனர்.

குழுவை பட்டியலிடுவதற்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக வாக்களித்தனர்.

# றொறன்ரோவின் ஸ்கார்பரோப் பகுதியில் கத்தியுடன் கலாட்டா பண்ணியவர் கைது

றொறன்ரோவின் ஸ்கார்பரோ பகுதியில் கத்தியுடன் சண்டையிட்ட இந்திய இளைஞரைத் தாம் கைது செய்துள்ளதாக பொலிஸ் தரப்பு அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான காணொலி ஒன்று சமூக ஊடகத்தில் பெரும் கவனம் ஈர்த்துள்ள நிலையிலேயே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பில் பொலிசார் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

ஞாயிறன்று பகல் சுமார் 10.35 மணிக்கு டான்:.போர்ட் மற்றும் கென்னடி சாலையில் ஒருவர் கத்தியுடன் மிரட்டல் விடுக்கிறார் எனத் தகவல் கிடைத்துள்ளது. அந்தப் பகுதியில் இருவர் ஆபத்தான வேகத்தில் வாகனம் செலுத்தினர் எனவும், இன்னொரு சாரதி அவர்களைத் தடுத்து நிறுத்திக் கேள்வி கேட்டார் எனவும் கூறப்படுகிறது.

ஆனால் திடீரென்று அந்த சாரதி கத்தியுடன் காரில் இருந்து இறங்கி, தாக்க முயன்றுள்ளார்.

இது தொடர்பான காணொலி சமூக பக்கத்தில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரம் திடீரென்று வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டு, ஒருவர் கத்தியுடன் வெளியே வருவதும், காணொலியைப் பதிவு செய்யும் நபரைத் துரத்துவதும் பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், அஜாக்ஸ் பகுதியை சேர்ந்த 21 வயது ரிஷப் பருவா என்பவரை ஞாயிறன்று இந்தச் சம்பவத்திற்கு பின்னர் தாங்கள் கைது செய்துள்ளனர்



எனப் பொலிஸார் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

அவர் மீது பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் ஆயுதத்துடன் மிரட்டல் விடுத்தமை, கத்தியால் தாக்க முயன்றமை உள்ளிட்ட மூன்று பிரிவுகளில் வழக்கு பதியப்பட்டுள்ளதாகப். பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் ரிஷப் பருவாவுடன் காரில் அன்றைய தினம் பயணித்த நபர் தொடர்பிலும் தாங்கள் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த நபருக்கு 20 முதல் 30 வயதிருக்கலாம் என்று முறிப்பிட்டு, அவரின் படம் ஒன்றையும் வெளியிட்டு பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.